இதன் பின்னர் ஆன்ம உண்மைகள் விளக்கம் செய்யப்பெறுகின்றன.

சித்தர்கள் பலரும் கூறுகிற ஒளிக்காட்சி பற்றிய விளக்கத்துடன் நூற்பா தொடங்குகிறது.

இந்த நூலின் அமைப்பிலே உள்ள ஒரு சிறப்பு என்னவென்றால் பாடல்களின் நடுவிலே உரைநடை விளக்கங்கள் காணப்பெறுகின்றன.

நிஜானந்த போதம்

அறிவான படம்நாலு வாலோ ஒன்றாம்
அப்பனே! ஐந்துதலை விரித்தே யாடும்
குறியான நாவதுவும் கூழை கூழை
குறித்துப்பார் கைவசமா யாகும் பாரே.

பூதலத்தில் பலவிதமாய்ப் பேச லான
பெருமையினை ஒருவழியிலிருந்து பார்க்க
மாதலத்தி லறிவுடைய பிள்ளாய்! கேளாய்;
மகத்தான மேருகிரிச் சிகரந் தன்னில்
பாதலத்தும் மீதலத்தும் எங்கு மான
பரம்பொருளா யரும்பொருளாய்ப் பிரகா சிக்கும்
சீதமுறு மதியிரவி சுடரு மாகிப்
பொற்கொடிபோல் காந்தியுறும் பொருளு மாமே.

மெய்யான பொருளென்ன சோதி சோதி!
மேவிநின்ற தலமென்ன வன்னி வன்னி!
மெய்யான தலமென்ன அப்பு வப்பு!
மேகாந்த வெளியென்ன வாயு வாயு!
மெய்யான தெய்வமென்ன அண்ட மண்டம்!
மேவிநின்ற இடமென்ன மண்ணு மண்ணு!
மெய்யான தெய்வமென்ன பஞ்ச கர்த்தாள்
மேவுசடாட் சரமுடிவி லமர்ந்த மூலம்.

உரைத்திடவே ஓங்காரம் ஒன்றே கோணம்!
ஓங்குமதில் சுழியொன்று நடுயி ராகம்!
வரைத்திடவே யிகாரவட்டந் தனிலே வாசி
வளமாகத் தீர்ந்தபின்பு சுவாச முண்டாம்!
கரைத்திடவே யிடைகலைபிங் கலையு மாகிக்
கனத்தபரி வளையம்போல் சுழன்று பொங்கி
அரைத்திடவே சுழுமுனையால் ரேசகபூ ரகமாய்
அமர்ந்துநின்று சுவாசமது கும்ப கத்தில்
உரைத்திடவே ஒன்றுக்கொன் றுதவி யாகி
உகங்கோடி காலமதா யுறுதி யாச்சே.

உருதியென்ற ரேசகமும் வன்னி வன்னி;
உண்மையென்ற பூரகமும் அப்பு வப்பு;
சுருதியென்ன ரேசகத்தால் கும்பித் தக்கால்
கடுகிடென்று சுழன்றுமது யிகாரம் புக்கும்;
வருதிய யிந்தவகை மாசூட் சந்தான்
வளமாகச் சகலமுந்தா னடங்கிப் போச்சு;
மருகாமல் மாய்கைவிட்ட மாண்ப ருக்கு
மாசித்தந் தொழிலெல்லா மவர்க்கீ டாமே.

வாங்கவே நவக்கிரகம் தன்னால் மைந்தா!
வளமான அனுக்கிரகம் தன்னைக் காணாய்;
தாங்கவே அனுக்கிரகம் விந்து விந்து;
தனதான நவக்கிரகம் நாதம் நாதம்;
பாங்கவே முடியடிதான் அனுக்ர மாகும்;
பரமான் கற்பமது நவக்கிரகந்தான்
மாங்கவே அனுக்கிர மிரவி யுச்சம்,
மைந்தனே! நவக்கிரகம் பகல்தா னுச்சம்.

உச்சமென்ற வளர்பிறைக்கிவ் விதமாய் மைந்தா!
உதகமென்ற தேய்பிறைக்கு நவக்கிரக முச்சம்;
உச்சமென்ற தேய்பிறைக் கனுக்கிரகம் பெண்ணு;
உதகாதி நவக்கிரகம் ஆணு வாணு;
உச்சமென்ற வளர்பிறைக்கனுக் கிரகம் ஆணு;
உண்மையென்ற நவக்கிரகம் பெண்ணு பெண்ணு;
உச்சமென்ற அனுக்கிரகம் நவக்கிரகம் கூடும்
உண்மையெல்லா மரைநொடியி லுரைத்திட் டேனே.

ஈளையென்ற நோய்வந்தால் நாளைப் பார்த்தே
இறக்கிவிட உபாயத்தை இனிமேற் கேளாய்;
சாளையென்ற கிழமையொடு நட்சத் திரமும்
சாருந்திதி மூன்றனையும் எண்ணிப் பார்த்து
வேளையென்று மிவன்பேரை வட்டத் திட்டு
விதித்தபிணி நாள்கட்சி யாக்கிக் கொண்டு
சாளையுமே வாராமே லுருவே சேவி
தணிந்துவிடு மின்னமிது சைகை கேளே.

சைகையென்ன அவன்படுத்த நர்ள்செவ் வாயே;
தானான திங்களைமுன் தாக்கிச் சேவி;
மாய்கையென்ன செவ்வாயைக் கடைசி யாய்வை;
மையற்ற வாரமுமப் படியே சேவி;

ஏய்கையென்ன மதியிரவி காரி வெள்ளி
ஏதுகுரு புத்திசெவ்வா யென்று சேவி;
வாய்கையவன் பிணிதணியு மேழா நாளில்
வாங்குமடா அதுநிற்க வேறே கேளே;

வேறென்னப் பரணிக்கு வருமுன் மின்னே
விளம்படா முன்மொழியி னுபாயம் போல;
கூறென்னக் கார்த்திகையை முன்னே கூறிக்
குதிரையின்பேர் பிறகுரோ கிணிதொட் டெண்ணு;
மாறென்னப் பரணிதன்னைத் தொடர்ந்தி டாதே;
மனையெடுப்புக் கடையாகத் தரவே தாக்கு;
பேரென்ன மூதொன்ப துக்கு மிந்தப்
பிரயோகம் சேவிக்கப் பிணிகள் போமே.

பிணிபோமே திதிக்குமிந்தப் படியாம் அப்பா!
பிரயோக மந்திரத்தை இனிமேற் கேளு
அணியணியாய் வாரம்நாள் நட்சத்தி ரங்கள்
அடுக்கடுக்கா நீயோதி அவன்நோய் நாமம்
தணியநசி நசியென்னக் கணக்கா லுள்ள
சாத்திரமே யுருவோதி விபூதி போடு
பணியென்னக் கொண்டபதி னைந்துபக்கம்
பத்திரண்டே முக்கும்நட் சத்ர மாமே.

ஆமப்பா நாளுக்கே யுருவென் னப்பா!
அப்படியே கிரகபலன் அதுக்கு மாகும்;
போமப்பா திசைபலனப் படியே யாகும்;
பொல்லாத நாள்போச்சுக் கோளும் போச்சு;
ஆமப்பா லக்கினத்தின் பதியா ருடம்
நட்பாட்சி யுச்சமுரு நவக்ர காதி
ஏமப்பா சாபமது பிடியா தப்பா!
எடுபடுமே வியாதிமுத லெல்லாந் தானே.

எல்லாரு மறியவொரு மருந்து கேளு:
எந்தெந்த நோயாளி தனக்கும் செய்ய
வல்லாண்மை யவன்படுத்த தலத்தின் மண்ணை
மருந்துடனே முன்சேர்த்து மாப்புக் கூட்டிக்
கொல்லானோ யமனையிந்த மண்ணை வாரிக்
கூறிட்ட வைத்தியனோ குருவாச் சப்பா!
பொல்லாத பேர்களுக்கு மிம்மார்க் கத்தைப்
புகலாதே பூராய குருவென் றெண்ணே.

எண்ணியே கைபார்க்கும் போது நீயும்
இரக்கவா னானக்கால் பிணிகொண் டோனை
நண்ணியே யவன்தலையில் நடுவே தீயை
நாட்டியதி லாறிட்டு நாசி மூச்சால்
நுண்ணிய மூச்சடக்கி யுருஞ்சிப் போடு
உனக்குவரும் காய்ச்சலிற்கு முபாயம் கேளு;
தண்ணீரில் சுரதிநசி யென்று மூழ்கித்
தானபா னஞ்செய்து தீர்த்துக் கொள்ளே.

தீர்த்தமதி லாடிநீ நவக்ரக காதி
செபம்செய்து முப்பதுநா ழிகைக்குள் ளாக
வேர்த்துவிடும் முன்தேக காந்தல் போகும்;
விபூதியிலே சதுரமிட்டுப் பிறையும் போடு;
பார்த்திருக்கும் போதல்லோ தானும் நல்ல
பண்டிதமா ருபாயமது பார்மேல் செய்வர்
கோத்திரத்தி லுனக்குவெகு புண்ய முண்டாய்
உலகருக்கு மிதுவயணங் கொண்டு செய்யே.

கொண்டுவா நிதமுமிந்தப் படிதண் ணீரில்
குறியிட்டு முச்சிரங்கைக் கங்கை நீரை
உண்டுவா பூதியங் கையிற் கீறி
பூட்டினமே யுனக்குவர மாட்டா தப்பா!
முண்டுவா ரவரவரைச் சினேகி யாதே
முகூர்த்தமிட்ட ஏழாநாள் சீயைச் சேரு;
பண்டுபோர் பெரியோரை யடுத்துக் காத்துப்
பரிகாரி பரிபாகி யாவாய் தானே.

பிரமன் விண்டு ருத்திரர் மகேசர் சதாசிவமான பஞ்சமூர்த்திகள் மூலாதார கணபதியோடு ஆறு ஆதாரங்களிலிருப்பதாக மறை கூறுகின்றது. மண், நீர், அக்கினி, காற்று, ஆகாயம் சர்வ நால்வகை யோனி வடிவம் சீவர்களுக்கும் ஆதாரமாயிருப்பன, அனைவருக்கும் நாசியில் உசுவாச நிசுவாசமாய் உலவிவரும் இடைகலை பிங்கலையாகச் சுழுமுனை ஆதாரத்தில் மாறி நடந்து வரும் சத்தி சிவசந்திர சூரியரெனும் சுவாசமான வாசியானது நாளொன்றுக்கு 2,11000,600 சுவாசமாய் நடந்துவருகின்றது. அப்படி நடந்து வருவது மனமாகவும் வாசியாகவுமிருப்பதில் நாள் ஒன்றுக்கு 12 வட்டமாயும் சந்திர பாகத்திலும் சூரிய பாகத்திலும் ஐம்பூதப் பிரிவாய்ப் பிரிந்து காட்டுகின்றது. இப்படிக் கலையில் நடக்கும் ஐம்பூதம் அந்தஃகரண வியாபாரத்தால் அறிவைத் தோற்றுவிக்காமல் ஆயுளையும் க்ஷீணப்படுத்தி, நரைதிரை மூப்பை எளிதில் உற்பவம் செய்துவிடுகின்றன.

சத்தியென்ற வடிவேதிங் கொளியாய் நிற்கும்
சாதகமாம் சிவமேதிங் கொளியாய் நிற்கும்
வெத்தியென்ற வொளிவெளியு ளொன்றிற் றானால்
வேதாந்த சித்தாந்த மிரண்டு மொன்றாய்
முத்தியென்ற வ்டிவாத் தோற்றம் பாரு;
மூதண்ட ரூபமென்கே சரியு மாகும்;
வெத்தியென்ற விந்தையெல்லாம் வெளியாய்ப் போகும்;
வேதமென்ற முடிவதனைப் புகன்றிட் டேனே.

ரூபமென்றால் ரூபமல்ல; பச்சை யல்ல;
உத்தமனே! மஞ்சளல்ல; வெள்ளை யல்ல;
ரூபமென்றால் கறுப்பல்ல; புகைமேக மல்ல;
ஊன்றிப்பார் மனமிதனி லின்ன தென்று
ரூபமென்றால் அடியல்ல; முடியு மல்ல;
ஓகோகோ சிவரூபம் நன்றாய்த் தோன்றும்;
ரூபமென்றால் விளக்கொளியின் பிரகாசம்போல்
உண்மையிதை யறிந்தவனே தலைவ னாமே.

பாரி டங்க ளுள்ளதும் பரந்த வான முள்ளதும்
ஓரி டம்மு மன்றியே ஒன்றி நின்ற தொன்றடா!
ஆரி டம்மு மன்றியே அகத்து ளும்பு றத்துளும்
சீரி டங்கள் கண்டவர் சிவன்தெ ரிந்த ஞானியே!

பாரப்பா! பிராணனெனும் பிராண வாயு
பத்தியுடன் தானியங்கும் வகையைக் கேளு;
நேரப்பா நடனரவி சுழியிற் றோன்றி
நின்று சுத்தி நொடியிற்சிம் மெனவி றங்குச்
சாரப்பா! ஓமெனவே மூலா தாரம்;
சார்ந்திருந்து நாபியிலே ஆரவன் றோட்டிக்
காரப்பா! சாவென்கதிர் மதியிற் சென்று
கபாலத்தைச் சுற்றிநடு நாசி காணே.

பிராண வாயுவானது தச வாயுவாய்த் தசவிதத் தொழிலை நடத்தி, முடிவில் பிராண வாயுவாய் நிற்கும். மன அசைவால் பிராணாதி வாயுகளுதிப்பு; மன அசைவிலாதிருந்தால், வாயுக்களுக்குத் தொழிலில்லை; மனமாகிய வாசியே மனம் ; மனமானது சலம் கனல் வாயு இம்மூன்றும் கூடியது.

"தானான மூலமுத லாறு வீடும்
சாக்கிரத்தின் கோட்டையிலே சார்ந்து நிற்கும்
கோனான பஞ்சகர்த்தா லிருக்குமிடம்"

என்று இவ்வனுபவங்களை மேலோர் கூறியிருப்பதும் காண்க.

"ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டிக்
கருவிக ளொடுங்குங் கருத்தறி வித்தே
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டிக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் முண்டெழு கனலைக்
காலா லெழுப்பும் கருத்தறி விக்க"

என அவ்வையார் கணபதியைப் பிரார்த்தித்திருப்பதால், சென்னமெடுத்த ஒவ்வொருவரும் மேற்கண்ட அனுபவத்தைச் சுருதி குருவால் சுவானுபவம் பெற்று வாழ்வதே நற்பயனாகும்.

வகையான வாசியது மனமும் கண்ணும்
மயங்காதே சிவாயமென்று புலம்பி டாதே;
பகையாதே அட்சரங்கள் ஐம்பத் தொன்றும்
பரிபாடை யாயுரைத்த நாம பேதம்;
திகையாதே நாமமென்றட் சரங்க ளென்றும்
செபியாதே யறிவுகெட்ட மனித ரைப்போல்;
நகையாதே மானிடர்பல் சாதி யென்று;
நம்பாதே நல்வழியின் காலைப் பாரே.

திரிமூர்த்தி தேவர்முதல் மனித ரோடு
சிவயோகம் பெற்றிருந்த மார்க்கந் தன்னைப்
பிரியமுட னெனைத்தொழுது கேட்ட பிள்ளாய்!
பிங்கலையு மிடைகலையும் மாறும் போதங்
கறிவான சுழுமுனையில் மனத்தை வைத்தே
அசையாம லொருமனமாய்க் காக்கும் போது
குறியான சிவயோகம் சித்தி யாச்சு;
கோடிசென்மம் சித்தரைப்போல் வாழ லாமே.

எட்டுத் திசையும் பதினாறு கோணமு மெங்கு மொன்றாய்,
முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை மூடரெல்லாம்;
கட்டிச் சுருட்டித்தம் கக்கத்தில் வைப்பர் கருத்தில் வையார்
பட்டப் பகலை யிரவென்று கூறிடும் பாதகரே.

இரேசகம், வன்னி, பூரகம், அப்பு; பிராணவாயு அமிசம், வாசி; தசநாடிகள் இருதயத்தினசைவு, அறிவு; நேத்திரக் கருமணி ஒளிவு; நாசி மூலமாய் வெளி கழிவது, விடம் பொருந்திய சூரியகலை; ஆகாய சந்திர கிரணங்கள் முன்னிலையில் அமுதம் உள்புகுவது சந்திர கலை

யென்றும், உள்செல்லும் அமுதம் உள்சென்று உதிரத்தில் கலந்து உதிர சுத்தியும் செய்து சீவனுக்கு ஆதாரமாயிருக்கின்றன. இவ்வமுத பலத்தால் தவசிகள் தேகத்தைப் போஷித்து நெடுங்காலமிருப்பதாக மதியமும் உட்கொள்ளும்படி செப்பியிருக்கின்றனர். கைலாயமென்னும் சுழுமுனை வீட்டில் ஓங்காரித்துக் கொண்டு தலையெழுத்தாக இருப்பது உணர்வு. அவை அசைவற நிற்கில் சிவமாம்; அசைவுறில் சீவனாம்; மூச்சாகவும் பேச்சாகவும் சப்திப்பது சத்தி; இவையே பேசு மெழுத்துப் பேசாவெழுத்தெனப் புகல்வன. பேசுமெழுத்து மனம்; பேசாவெழுத்து; வாசி சாகாவேகாதலைபோகாப் புணர்ப்பென மறை கூறும் வாசியாகிய வாயுவையும், ஆகாய வெளியையும் ஆவியாகிய வன்னியையும், எச்சமய மகான்களும் அடையவேண்டும்.

கால் என்பது,பிருதிவி; தலையென்பது , ஆகாயம்; மத்தி, அப்பு; உடல், வாயு; உயிர், அக்கினி அறிவுமயமாய் நின்றன.

தானாகித் தான்முடிந்த சூட்சந் தன்னைத்
தரணிதனி லறியாமல் தான்தா னென்றே
ஊனாகி நின்றதிரு வுடலைக் காணான்
உடலில்நின்ற அட்சரத்தி னுறுதி காணான்
ஆணாகி நின்றதிரு வாசி காணான்
அமர்ந்துநின்ற வாசிதிரு நயனங் காணான்
வானாகி நின்றவடி முடியுங் காணான்
மதிகெட்டு விதியழிந்து மாளு வானே.

ஆகாய ரவியினிடத்து உஷ்ணக் கிரணமும் மழைக்கிரணமும் பனிக்கிரணமும் உண்டாகியது போல, அறிவினிடத்தில் இடைகலை பிங்கலை சுழுமுனையென்று மூன்று கிரணமுமுண்டாயின.

மணிமந்திர ஔஷத பரிகாரமாகிய மூன்றில், சரமாகிய வாசியின் லக்ஷியம் தெரிந்து, அவ்வனுபவத்திலிருந்து பிணியாளன் வியாதியை நேத்திரத்தால் கண்டு, வாசியினால் ஆகருஷ்ணம் செய்வதே மணிமந்திர பரிகாரமாகும். ஔஷதாதிகளால் வியாதியை நிவர்த்திப் பதாயிருந்தாலும், வைத்தியனுக்கும் மற்றவர்களுக்கும் சர அப்பியாசம் வேண்டியிருப்பதால், அதற்குரிய அனுபவிகளையடைந்து, இரேசக பூரக கும்பகம் இன்னவை யென்றுணர்ந்து அடைதலே நன்மார்க்க நிலையாகும்.

இனி இந்த நூலில் சுவையானதும் நுட்பமானதுமான தத்துவ இலக்கணம் கூறப்படுகிறது. அது வருமாறு:-

சரியை கிரியை யோக ஞானமாவன

மன்னுயிரும் தன்னுயிர்போல எண்ணுவது சரியை; மனுநீதியும் குருமொழியும் தப்பாதிருப்பது கிரியை; ஒன்றாமே அலையும் மனமொடுங்குவது யோகம்; எப்போதும் தற்பரமாய் நின்றதுவே ஞானம்.

நான்கு பதமாவன

கடவுள் சிருஷ்டித்த உலகில் வசிப்பதே சாலோகபதம்; கடவுளை எதிரிட்டுப் போற்றி வாழ்தலே சாமிப பதம்; குரோதாதி குணங்ளை நீக்கிச் சத்துவ குணமாயிருப்பதே சாரூப பதம்; துவித பாவனை நீக்கி, ஆத்தும விசாரணை செய்து, கடவுளொடு இரண்டறக் கூடி அது தானாய் நிற்பதே சாயுச்சியபதமாகும்.

அஷ்ட கர்மமாவன

பிராணாயாமத்தால் வாசியை வசப்படுத்திக் கடவுள் திருவருள் மீது மோகித்து, நித்திரையை நீக்கி, கண்பார்வையைப் பகிர்முகப் படுத்தாமல், ஐம்பொறிகளை வித்துவேஷித்து, நானெனும் அகங்காரத்தைப் பேதித்து, பூரணத்தில் மனத்தை ஐக்கியஞ் செய்து, சஞ்சித வினைகளை மாரணம் செய்வதாகும்.

அஷ்டாங்க யோகமாவன

காமமாகிய இச்சையைத் தோன்றாமற் செய்து, தக்க ஆதனத் திருந்து, நாம ரூபத்தை நாடும் மனத்தை இருதயாம்பரத்திலிருந்து புறவிடங்களை நீக்கி, விகற்பமில்லாமல் தச்சொரூபத்தை நாடி, வெளி ஒளிதானே தானாய் ஒத்து நிருவிகற்ப மாகுதலாம்.

அணிமாதி சித்தியினி விவரம்

அணிமா, சூக்ஷ்ம காரண மகாகாரண சரீரமென்பதில் மகாகாரண சரீரமாய், அணுவிலசைவாக நுழைவது; மஹிமா, விஸ்வரூபமாய்த் தோன்றல்; ஹரிமா, அதிக பளுவாயிருத்தல்; லஹிமா, தக்கையைப் போல இலேசாய்க் காட்டல்; பிராப்தி, இரவி மதியோரை வசப்படுத்தல்; பிரகாமியம், பிறர் காயத்தில் நுழைந்து, நினைத்தவரிடம் அக்கணமே தோன்றல்; ஈசத்துவம், பஞ்ச கிர்த்தியத் தொழிலை நடத்துதல்; வசித்துவம், அண்டர் முதலிய அனைவரையும் தன்வசமாய் இருக்கச் செய்தல்.

தேகமைந்தின் விவரம்

அவை இருள் தேகம், மருள் தேகம், சுத்த தேகம், பிரணவ தேகம், ஞான தேகம் என்பன.

இருள் தேகமாவது, ஸ்தூல தேகத்தில், அபானத்தில் மலக்குற்றம், நாவில் நாடிக்குற்றம், கண்டத்தில் கபக்குற்றம், மேல் மூலத்தில் திரைக் குற்றம், மனத்தில் ஆணவ மலம் பொருந்தி நானெனும் அஞ்ஞானக் குற்றமாவது.

மருள் தேகமாவது, மாயா சம்பந்தமாய்த் தனக்கு வருவது தெரியாமல் அகங்காரங் கொள்வது.

சுத்த தேகமாவது, கருவி கரணாதகளிறந்து அறிவு அருள் வடிவாய்ப் பார்வைக்குத் தேகம் தோன்றுவது.

பிரணவ தேகமாவது, தேகம் தோற்றினும் கைக்குப் புலப்படாததும் நிழல் சாயை இல்லாததுமாம்.

ஞான தேகமாவது, கண்ணுக்குத் தோற்றாமல் அறிவிற்குப் புலப்படுவது.

திருக்கு திருசியமாவன

நாம ரூப பிரபஞ்சம், இந்திரியங்களுக்கு விஷயம்; இந்திரியம் கரணங்களுக்கு விஷயம்; கரணங்கள், சீவனுக்கு விஷயம்; சீவன் சீவசாட்சிக்கு விஷயம்; சீவசாட்சி, விவேக ஞானத்திற்கு விஷயம், விவேக ஞானம், பரிபூரண சைதன்னிய மென்னும் அறிவு ஒன்றுக்கும் விஷயமாகாது; இந்தச் சொரூப நிலையே தானென்றுணர்ந்து அதுவாய் விளங்குவர் ஞானியர்.

ஞானிகள் தேக சித்தியாதற்குத் தச தீட்சை விவரம்

முதல் தீட்சையில் ரோம துவாரங்கள் வழியாகக் கெட்ட நீர்கள் வியர்வையாய்க் கசியும்; இரண்டாவதில் முத்தோஷமாகிய வாத பித்த சிலேத்தும தோஷம் நீங்கும்; மூன்றாவதில் பழைய கெட்ட உதிரங்கள் கசியும்; நாலாவதில் சர்ப்பம் தோலுரிப்பது போலச் சரீரத்தில் தோலுரியும்; ஐந்தாவதில் சட்டை கழன்று தேகம் சிவந்த நிறமாகப் பஞ்ச மூர்த்திகள் கோரியதைத் தருவார்கள்; ஆறாவதில் சட்டை கழன்று சுழுமுனை வாசல் திறந்து, தூர திருஷ்டி தெரியும். ஏழாவதில் சட்டை வெளுப்பாய்க் கழன்று, தேகம் தீபம் போலப் பிரகாசிக்கும்; எட்டாவதில் சடத்தை உயரத் தூக்கும்; இலாகிரியுமாகும்; கூடுவிட்டுக் கூடு பாயும்; ஒன்பதாவதில் தேகம் சூரியபிரகாசமாய் அஷ்டமாசித்தியும் கைவல்யமாய்த் தேவர் ஏவல் புரிவர்; பத்தாவதில் தேகம் தீபம் போலப் பிரகாசித்து, தேகத்தை வெட்டக் கத்தியோடும்; சொரூப சத்தியாம்; அண்டத்தில் மௌனம் நரை திரை மூப்புப் பிணி மரணம் ஏற்படா.

தவசிகளுக்கு ஆதாரம் வாசி. 'வாசி' என்பது, பிராண வாயு; இதைக்கொண்டு சகல சித்திகளையும் பெற்றனர். சுடரான சுழுமுனையில் சந்திரன் சேரில், பஞ்சபூதமும் அறிவும் ஒடுங்கும்; இரவி சேரில், ஐம்புலனும் அறிவும் பெருகும்; இரவி மதி ஒன்றாய்க் கூடிச் சுழுமுனையிடம் ஒடுங்கில், அறிவும் தசவாயுவும் ஒடுங்கும். வாசி நடுநிலையிலும், மூலத்திலும், நாபியிலும் கண்டத்திலும், சுழியிடமும் சதா நிற்கப் பெற்றவர்கள்தாம் மெய்ஞ்ஞானிகள்.

சாகாக் காலையும், வேகாத் தலையையும், மணியாடும் கோணத்தையும் ஆசான் முன்னிலையில் தெரிந்து, மும்மூலமாகிய உந்தி, மார்பு, நெற்றிக் கண்ணிடமிருப்பர். அமாவாசை அன்னந் தண்ணீரிறங்குமிடம். பருவம் அன்னரசம் பிரிக்குமிடம். நாதமென்பது, தீமனம்; விந்தென்பது வாசி. தீயானது வாசி மீதேறி விளையாடும்; சாகாக் கால் வாசி; வேகாத்தலை ஆகாசவெளி; போகாப் புனர் ஆவியான வன்னி; ஆக மூன்றும் கூடியது நாதமென்றும், பசந்த மண்ணும் தண்ணீருமான இரண்டும் விந்துவென்றும் விளங்கும்.

இந்த விளக்கத்தை அடுத்து மூன்று எழுத்து, மூன்று மதம், மூன்று மணி, பத்து சாதனங்கள் ஆகியவற்றின் விளக்கத்தை இந்த நூல் தருகிற்து. இவை அனைத்தும் ஞானகுரு நேரில் கற்பிக்க வேண்டிய சூக்குமப் பொருள்களாம்.

இதனை அடுத்து இந்த நூலிலே திருமந்திரம் போன்ற பழைய நூல்களிலிருந்து மேற்கோள் காட்டிப் பருவுடலையும் நுண் உடலையும் விளக்குகின்ற இரகசியங்கள் பேசப் பெறுகின்றன:-

"ஸ்தூல தேகத்தைப் போஷிக்க ஆகாரம் கொடுப்பது போல, சூஷ்ம தேகமாகிய ஆவியாகிய வன்னிக்கு ஆகாரமாகச் சந்திர கிரணங்களின் அமுதத்தைக் கொடாததால், மூல அனலுக்கு ஆவி குறைந்து ஆயுள் க்ஷீணப்படுகின்றது".

'குலம்' என்பதும், 'சாதி' என்பதும் முடிவாகப் பார்க்கில், மானிடப் பிறவியில் ஆண் பெண்ணாக விளங்குவதில், கொலை களவுகள், காமம், பொய்யாகிய ஐந்து பாதகத் தொழிலை நிக்கிரகித்துச் சத்துவ குணத்தோடு, பாபெமனும் பொருள் யாதோ காரணம் விவர மறிந்ததுதானே ஆசனையென ஆத்தும விசாரணையைச் செய்து முடிவை நாடிக் கைக்கொண்டு, நன்று தீதெனத் தெரிந்து நடவாமல், புலால் மது பானங்களையுண்டு, ஊண் உறக்கமைதுனமே பெரும்போக மெனவாழ்நாட்களை மிருகாதிகளின் பாவமாயிருந்து கழிப்பவரே கீழ்க்குல மெனப்படுவர். மனத்தை ஒருமை செய்யாமல், காவிகாம்பிர தண்டு கமண்டல விபூதி பூசினும் துவாதச நாமம் தேகத்தில் சார்த்தினும், சதா ஆலயம் புகினும், ஐந்து கால சபதப சந்தியாவந்தனம் புரியினும், யாதொரு பயனுமிராது; தனக்குத் தானே வஞ்சகக் கள்வனாவன்.

மணிகடல் யானை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபேரி கையாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்கவொண் ணாதே

- திருமந்திரம்

மானிட சரீரத்தில் தசவித நாதங்களும், பகிர்முக நோக்கில்லாமல் அந்தர்முக நோக்குடையவர்க்கு விளங்கும் சத்தம் ஓசை எனப்படும்; அதுவே நாதமாகும். நாதம் ஆகாயத்திலுற்பவம். சத்தம் பிறந்த இடத்தில் சகல கலையுமுதிக்கும். நாத விந்து கலை எனப் புகல்வது, நாதமானது பெண்பாலிடமென்றும், விந்தென்பது புருடனிடமிருப்ப தென்றும் கூறுவது சகசமாயிருந்தாலும், ஆணிடத்திலும் பெண்ணிடத்திலும் நாதவிந்திருப்பது உண்மையாயிருக்கும். இதை அனுபவத்தால் நிச்சயிக்கக் கூடும். குளவியானது கிடமாகிய புழுவை எடுத்துக் கொண்டுபோய் மண் கூட்டிலமைத்துச் சிறிய வழிவிட்டு, அவ்விடம் குளவியானது தனது வால் முள்ளினால் பல தரமும் புழுவைக் குத்தி ரீங்காரமான பிரணவ நாதத்தை ஒலிக்க, குளவி குத்திய துன்பத்தைச் சகியாத மகா துன்பத்துடன் நாத ஒலியைக் கேட்டிருந்த புழுவானது. அந்த வடிவம் நீங்கிக் குளவி வடிவம் பெற்றது. அதுபோல, மானிட தேகமுடையவரும் தமக்கு எதிரிட்டிருக்கும் மரண பாதைக்கு மிகப்

பயந்து, சதா ஆகாய அமிசமான பிரணவ நாதமின்னதென்று ஆசிரியரிடம் கேட்டு, மனத்தை அதில் இலயப்படுத்தியிருக்க, சூக்ஷ்ம சரீரம் சித்தியாகும்.

எஞ்செய லாலெய்து மின்விதியு மல்லாது
தஞ்செய லாலுண்டோ தந்தைவிதி - எஞ்செயலோ
முன்னா ளமைந்த மொழிதவ றாதந்நாள்
இந்நா ளமைப்பது மில்

எனவும்,

தந்தை விதியல்லோ இந்த விதிகளெல்லாம்?

எனவும்,

பாதகங்கள் போமென்றீர் பாவ மென்ன
பரமான என்குருவே! அருளிச் செய்வீர்;
சூதகமாம் நாதத்துள் விந்து பூத்த
சுகம்போல இருந்ததடா! அதுவே பாவம்;
பேதையரைப் பெண்டாமை துனமே செய்து
பிறந்தாயே அவள் வயிற்றுட் சென்மித் தேதான்
மாதாளன் தாயேகொடும் பாவி நீதான்
மகவாகப் புறப்பட்டால் ஞான மாமோ?

ஆதாரமாகிய ஆகாய அமிசத்தில் ஒரு கோடியே ஒன்பது லட்சத்து அறுபதாயிரம் கணமான 50 நாள், 414 நாழிகை, ஆயிரத்தறுநூறு நொடிக்கணக்காய்ப் புருடனிடம் சுக்கிலத்தில்

மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது ஆயிர மாயினால்
ஆவியின் கூறுநூ றாயிரத் தொன்றே

அணுவில் அணுவினை ஆதிப் பிரானை
அணுவில் அணுவினை ஆயிரங் கூறிட்டு
அணுவில் அணுவை அணுகவல் லார்கட்கு
அணுவில் அணுவை அணுகலு மாமே

அணுவுள் அவனும் அவனுள் அணுவும்
கணுவற நின்ற கலப்ப துணரார்
இணையிலி ஈச னவனெங்கு மாகித்
தணிவற நின்றான் சராசரத் தானே

- திருமந்திரம்

புருடன் சுக்கிலத்தில் அணுவுக்கணுவாய் முன்கண்ட நாளளவாகக் கீட வடிவாய்க் கர்ப்பமிருந்து, மோகங்கொண்டு, ஸ்திரீயை நினைத்துப் புணர்ந்து, ஸ்திரீ சுரோணிதத்தில் சுக்கிலத்திலிருந்து கீடம் சம்பந்தமாகும் முறையான ஆண்பெண்ணும் மவுனமுற்றால் மோசமில்லை; கருவங்கே தரிக்கும் பாரு. இரு மனமும் ஒருமையுடனிருக்க வேண்டும். அவ்வகை உத்தமப் புணர்ச்சியில் ஸ்திரீயின் மனமானது புருடன் வடிவமீது நோக்கமாயிருக்க வேண்டும்; வேறு ரூபத்தின் மீது மனம் வைக்கலாகாது. ஒன்றான இருவரும் கூடியே

யுற்று உள்ளம் கணவன்றன் மேலுறில் நன்றதான கணவன்றன் உருவமாம். நாடும் காதலி மேல்நாட்டமுறில் நின்ற தாயுருவே வடிவாயுறும். நேச மாதுலன் போலிருந்தால், வழியன்றியே அவள் முன்னவன் பின்னவனாகி மைந்தன் கூறாமெனு நீள்மறை. இவ்வண்ணமாக வடிவம் பொருந்தும்.

புருடன் கலை சூரியனாயிருந்தால், கரு ஆண்வடிவமும்,சந்திர கலையாயிருந்தால் பெண் வடிவமும், பிருதிவி, அப்பு, தேயு, வாயு பூதியமாயிருக்கில், அவையவைகளுக்குரிய கணக்கின்படி ஆயுளமைவதாயும் இருக்கிறது. அப்படியமைந்த கருவானது. 280 நாள் அல்லது 300 நாள் பெண்வயிற்றில் வளர்ந்து வெளிகண்டது. அவ்வகை சென்மித்த சிசு, ஏழுவிதப் பருவமடையும்; அதை ஏழு பிறவியென்றும் புகல்வர். அவையாவன: புருடன் ஸ்திரீயை நினைந்து போகங் கொண்டது 1; சம்பந்தமுற்றுச் சுரோனிதத்தில் சம்பந்தமானவை 2:கருப்பையில் வளர்ந்தது 3; வெளித்தோன்றிய குழந்தைப் பருவம் 4; வாலைப்பருவம் 5: எவ்வன காமாதிகலாலலை வுரும் பருவம் 6; நரை திரை மூப்புப் பிணி மரணப் பருவம், 7; இந்த ஏழு பருவங்களிலும் வடிவமும் குணமும் நடக்கையும் பேதங்களாகவே யிருக்கும்.

புருடன் ஸ்திரீ இருவருக்கும் மோகவுற்பவ விவரம்.

கேளப்பா மனமான வாயுக் கூடிக்
கெடியான சித்தமா காயம் பொங்கி
வேளப்பா வாங்கார சிகார மிஞ்சி
மேவுதற்குப் பெண்மேலே மோக மாகும்;
நாளப்பா ஐந்திற்கும் பலமே தென்றால்
நலம்பெறவே சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு.
தாளப்பா மனத்தோடே வியானன் கூடித்
தனியான நாதத்தி லபானன் றானே.

தானென்ற விந்துவினிற் சமானன் கூடும்;
தனியான சித்தத்தில் வியானன் கூடும்;
தானென்ற ஆங்காரங் கெர்ச்சிப் போடு
கலந்துநிற்கும் உதானனப்பா கண்டு கொள்ளு;
வேனென்ற பத்துமொன்றாய் மனமுங் கூடி
மேவியவன் கலந்துவிந்து விழுகும்போது.
மானென்ற மௌனபர வசமே யாவான்
மருவுகின்ற பெண்ணுக்கம் முறைதான் காணே.

ஒன்றான விந்துவிலே விட்டகுறை வந்து உருத்தரிக்கும். அவ்வுருவே அவனவளுமாவார் என்றும், தனது நல்வினை தீவினையளவாகப் பெண் கர்ப்பத்தில் தானே பிறவி எடுத்து அனுபவிக்க வேண்டுமென்றும் அனுபவிகள் கூறியது மகாவாக்கியம்.

பிராணவாயு பித்தம் அக்கினி சலத்தில்; அபானவாயு வாதம் மலத்தில்; சமான வாயு அய்யம் சுழி விந்தில்.

தீயும் காற்றும் மலத்தில் சார, வாத வாயுவும் அக்கினியும் காற்றும் ஆகாயத்தில் சாரப் பித்தமுறும்; சகலமும் காற்றும் சுழியில் சார, சிலேற்புன்முறும்.

இதன் பின்னர் சித்தர்களின் அடிப்படைக் கொள்கையான வாசி நிலையங்கள், குண்டலி நிலைகள், முத்தீயின் இயல்புகள் முதலியன விளக்கம் பெறுகின்றன. இவற்றோடு சேர்த்து ஐம்பூத இயல்பும் அறிவின் விரிவும் தொடர்கின்றன:-

வாசி மூலவிடம் ஐந்து

நாசி முனை, சகஸ்ரம், பிடரி, நெஞ்சு, மூலம்.

முத்தீயின் விவரம்

குதஸ்தானத் தீயொன்று, ருத்திர ஸ்தானத் தீயொன்று, புருவமையச் சதாசிவ ஸ்தானத் தீயொன்று.

சந்திர சூரிய அக்கினி இடமாவன

மூலத்தில் அக்கினி; மார்பில் சூரியன்; முடியில் சந்திரன்.

உலவுமிடம்

சூரியகலை நடக்கும்போது சுவாசம் பிடரி வழிச்சென்று வரும்; சந்திரகலை நடக்கும்போது 312 பாகமாகிய மூளையில் சென்றுவரும்; மந்திரங்கால் மதி முக்காலென்பது; மந்திரம் சூரியன் கால்; மதி சந்திரன் முக்கால்; அங்குஷ்டப் பிரமாணமென்னும் அகத்தீசர் ஓர் அங்குலமுள்ள நேந்திர ஸ்தானமிருந்து ஆயிரத்தெட்டுக் கிரணங்கள் பொருந்திப் பகிர்முக நோக்காக யாவும் பார்த்தும் தான் சர்வ சாகூியாய் விளங்கும்.

ஸ்தூல மஞ்சீகரணம்

பிருதிவியில் பிருதிவி	-	அஸ்தி
பிருதிவியில் அப்பு	-	மாமிசம்
பிருதிவியில் தேயு	-	சர்மம்
பிருதிவியில் வாயு	-	நரம்பு
பிருதிவியில் ஆகாயம்	-	ரோமம்
அப்பினி லப்பு	-	மூத்திரம்
அப்பினில் பிருதிவி	-	உமிழ்நீர்
அப்பினில் தேயு	-	வியர்வை
அப்பினில் வாயு	-	உதிரம்
அப்பினில் ஆகாயம்	-	சுக்கிலம்
தேயுவில் தேயு	-	பசி
தேயுவில் பிருதிவி	-	தாகம்.

தேயுவில் அப்பு	-	நித்திரை
தேயுவில் வாயு	-	ஆலிசம்
தேயுவில் காயம்	-	சங்கமம்
வாயுவில் வாயு	-	ஓடல்
வாயுவில் பிருதிவி	-	நடத்தல்
வாயுவில் அப்பு	-	இருத்தல்
வாயுவில் தேயு	-	தத்தல்
வாயுவிலாகாயம்	-	கிடத்தல்
ஆகாயத்திலாகாயம்	-	மோகம்
ஆகாயத்தில் பிருதிவி	-	ஆசை
ஆகாயத்தில் அப்பு	-	துவேஷம்
ஆகாயத்தில் தேயு	-	ப்யம்
ஆகாயத்தில் வாயு	-	வெட்கம்

சூக்ஷ்ம பஞ்சீகர்ணம்

ஆகாயமும் ஆகாயமும்	-	நேத்திரம், அறிவு
ஆகாயமும் வாயும்	-	கண்டம்
ஆகாயமும் தேயுவும்	-	மார்பு
ஆகாயமும் அப்பும்	-	நாசி, பித்தம்
ஆகாயமும் பிருதிவியும்	-	இருதயம், அகங்காரம்
வாயுவும் பிருதிவியும் கூடல்	-	இருதயம், பிராணன்
வாயுவும் அப்பும்	-	குதம், அபானம்
வாயும் தேயுவும்	-	கண்டம், உதானன்
வாயுவும் வாயுவும்	-	சர்வ சரீரி, வியானன்
வாயுவும் ஆகாயமும்	-	நாபி, சமானன்
தேயுவும் ஆகாயமும்	-	செவி
தேயுவும் வாயுவும்	-	சரீரம்
தேயுவும் தேயுவும்	-	நேத்திரம்
தேயுவும் அப்பும்	-	சிங்குவை
தேயுவும் பிருதிவியும்	-	நாசி
அப்பும் ஆகாயமும்	-	சத்தம்
அப்பும் வாயுவும்	-	பரிசம்
அப்பும் தேயுவும்	-	பார்வை
அப்பும் அப்பும்	-	இரசம்
அப்பும் பிருதவியும்	-	கந்தம்
பிருதிவியும் ஆகாயமும்	-	வாக்கு
பிருதிவியும் வாயுவும்	-	பாதம்
பிருதிவியும் தேயுவும்	-	பாணி
பிருதிவியும் பிருதிவியும்	-	குதம்
பிருதிவியும் அப்பும்	-	குய்யம்

ஐவகை உற்பவம்

பிருதிவியினிடம் சராயுசமான வித்துகளாம் புல், பூடு, கொடி, செடி, மரம் முதலியவைகள்.

பிராணவாயு பித்தம் அக்கினி சலத்தில்; அபானவாயு வாதம் மலத்தில்; சமான வாயு அய்யம் சுழி விந்தில்.

தீயும் காற்றும் மலத்தில் சார, வாத வாயுவும் அக்கினியும் காற்றும் ஆகாயத்தில் சாரப் பித்தமுறும்; சகலமும் காற்றும் சுழியில் சார, சிலேற்பன்முறும்.

இதன் பின்னர் சித்தர்களின் அடிப்படைக் கொள்கையான வாசி நிலையங்கள், குண்டலி நிலைகள், முத்தீயின் இயல்புகள் முதலியன விளக்கம் பெறுகின்றன. இவற்றோடு சேர்த்து ஐம்பூத இயல்பும் அறிவின் விரிவும் தொடர்கின்றன:-

வாசி மூலவிடம் ஐந்து

நாசி முனை, சகஸ்ரம், பிடரி, நெஞ்சு, மூலம்.

முத்தீயின் விவரம்

குதஸ்தானத் தீயொன்று, ருத்திர ஸ்தானத் தீயொன்று, புருவமையச் சதாசிவ ஸ்தானத் தீயொன்று.

சந்திர சூரிய அக்கினி இடமாவன

மூலத்தில் அக்கினி; மார்பில் சூரியன்; முடியில் சந்திரன்.

உலவுமிடம்

சூரியகலை நடக்கும்போது சுவாசம் பிடரி வழிச்சென்று வரும்; சந்திரகலை நடக்கும்போது 312 பாகமாகிய மூளையில் சென்றுவரும்; மந்திரங்கால் மதி முக்காலென்பது; மந்திரம் சூரியன் கால்; மதி சந்திரன் முக்கால்; அங்குஷ்டப் பிரமாணமென்னும் அகத்தீசர் ஓர் அங்குலமுள்ள நேந்திர ஸ்தானமிருந்து ஆயிரத்தெட்டுக் கிரணங்கள் பொருந்திப் பகிர்முக நோக்காக யாவும் பார்த்தும் தான் சர்வ சாகூியாய் விளங்கும்.

ஸ்தூல மஞ்சீகரணம்

பிருதிவியில் பிருதிவி	-	அஸ்தி
பிருதிவியில் அப்பு	-	மாமிசம்
பிருதிவியில் தேயு	-	சர்மம்
பிருதிவியில் வாயு	-	நரம்பு
பிருதிவியில் ஆகாயம்	-	ரோமம்
அப்பினி லப்பு	-	மூத்திரம்
அப்பினில் பிருதிவி	-	உமிழ்நீர்
அப்பினில் தேயு	-	வியர்வை
அப்பினில் வாயு	-	உதிரம்
அப்பினில் ஆகாயம்	-	சுக்கிலம்
தேயுவில் தேயு	-	பசி
தேயுவில் பிருதிவி	-	தாகம்.